ஸ்ரீ தத்த குடீர வெளியீடு 4

ௐ

ப்ரும்மைவ ஸத்யம்.

குருவின் முக்கியத்வமும்-மகிமையும்

இயற்றியவர்:

சேங்காலிபுரம்
ஸ்ரீ ராமானந்த ப்ரம்மேந்திர ஸ்வாமிகள்

ஸ்ரீ K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்

பண்டிதராஜ V. சுப்ரமணியசாஸ்திரிகள் எழுதிய முகவுரையுடன் கூடியது.

Copy Right.] 1953 [விலை 0–4–0

முகவுரை.

மஹான்களாகிய சேங்காலிபுரம் ஸ்ரீ ராமாநந்தப்ரம்மேந்தரஸ்வாமிகள் அவர்களால் இயற்றப்பெற்ற "குருவின் முக்கியத்துவமும் மகிமையும்" என்ற இந்த வெளியீடுக்கு முகவுரை—அதுவும் என் போன்றவர்களால்—தேவையில்லை என்பது உண்மை.. ஆயினும் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் எங்களிடம் கருணைகூர்ந்து நேரில் வந்து எங்களை அனுக்ரஹிக்கும் நோக்கத்துடன் இந்த முகவுரையை எழுதியாக வேண்டும் என்று கட்டளையிட்டபின் அதற்குப் பணிவதன்றி நாங்கள் செய்வது வேறில்லை. இந்தக் கட்டளையை அனுக்ரஹமாகக் கொண்டு இந்த முகவுரையை எழுத முன் வந்துள்ளோம்.

1. "आचार्यदेवो भव" "ஆசார்யதேவோ பவ"

என்ற தைத்திரீயோபநிஷத் 'குருவை தைவமாக—இறைவனாகக்கொள்ள வேண்டும்' என்று கட்டளையிடுகிறது.

இந்தக் கட்டளையின்படி உலகின் எந்த மதத்தினரும் எந்த தேசத்தினரும் இன்றும்கூட குருவின் சிறப்பை உணர்ந்து ஆசிரியருக்குத் தமது வணக்கத்தைச் செலுத்தி வருகின்றனர்.

ஆயினும் நம் பாரத நாட்டில் குருவின் மஹிமை ஏற்றமடைந்த அளவு வேறெந்த நாட்டிலும் அடையவில்லை என்பது பின் வரும் குறிப்புகளால் அறியலாம்:—

2. वेदानुशासनसमं गुरुशासनमिष्यते ।
न तद्यज्ञफलं कुर्यात्तपो वा चरितं महत् ॥

வேதாநுசாஸநஸமம் குருசாஸநமிஷ்யதே ।
ந தத்யஞ்ஜபலம் குர்யாத் தபோ வா சரிதம் மஹத் ॥

குருவின் ஆணையும் வேதத்தின் ஆணையும் ஒரு தரத்தைச் சேர்ந்ததாகும். யாகங்களின் பயன்களோ, மிகப்பெருந்தவமோ, ஆசாரியன் ஆணை செய்யும் நன்மையைச் செய்யத் திறமையற்றது.

3. न च माता न च पिता तादृशो यादृशो गुरुः ।
गुरुर्गरीयान् पितृतो मातृतश्चेति मे मतिः ॥
शरीरमेतौ सृजतः पिता माता च भारत ।
आचार्यशिष्टा या जातिः सा सम्यगजरामरा ॥

ந ச மாதா ந ச பிதா தாத்ருசோ யாத்ருசோ குரு :।
குருர் கரீயாந் பித்ருதோ மாத்ருதச் சேதி மே மதி :॥
சரீரமேதௌ ஸ்ருஜத: பிதா மாதா ச பாரத ।
ஆசார்ய சிஷ்டா யா ஜாதி: ஸா ஸம்யகஜராமரா ॥

தாயோ தந்தையோ குருவிற்கு இணையாகார். இவ்விருவரையும் விட குரு சிறந்தவர் என என் கருத்து. ஓ பாரதனே! இவ்விருவரும்—தாயும் தந்தையும் உன் உடலைப் படைக்கிறார்கள். குருவின் படைப்பாகிய பிறப்போ, கிழத்தனம், இறப்பு, இரண்டுமில்லாமல் என்றைக்கும் அழியாதது.

4. येन प्रीणात्युपाध्यायस्तेन स्याद्ब्रह्म पूजितम् ।
मातृतः पितृतश्चैव तस्मात् पूज्यतमो गुरुः ॥
ऋषयश्च हि देवाश्च प्रीयन्ते पितृभिः सह ।
पूज्यमानेषु गुरुषु तस्मात् पूज्यतमो गुरुः ॥
(महाभारतम्, शान्ति. 108.)

யேந ப்ரீணாத்யுபாத்யாயஸ்தேந ஸ்யாத் ப்ரம்ம பூஜிதம்।
மாத்ருத: பித்ருதச்சைவ தஸ்மாத் பூஜ்யதமோ குரு :।
ருஷயச்ச ஹி தேவாச்ச ப்ரீயந்தே பித்ருபிஸ்ஸஹ ।
பூஜ்யமானேஷு குருஷு தஸ்மாத் பூஜ்யதமோ குரு:॥

எந்தச் செய்கையால் குரு இன்புறுகிறாரோ, அந்தச் செய்கையால் பிரம்மமே இன்பமடையும். ஆகையால் தாயினும், தந்தையினும் குரு சிறப்பாக வழிபடத்தக்கவர். ரிஷிகளும், தேவர்களும், பித்ருக்களும், குருவை வழிபடுவதால் பூஜிக்கப்பட்டவர்களாவார்கள். ஆகையால் குரு சிறப்பித்து வழிபடத்தக்கவர்.

மஹாபாரதம், சாந்திபர்வம் 108.

5. एतेषामपि सर्वेषां गरीयान् ज्ञानदो गुरुः ।
गुरोः परतरं किंचिन्न भूतो न भविष्यति ॥
(महाभा. अनुशासन. 233.)

எதேஷாமபி ஸர்வேஷாம் கரீயாந் ஞாநதோ குரு:।
குரோ: பரதரம் கிஞ்சித் ந பூதோ ந பவிஷ்யதி ॥

இவர்கள் எல்லோரைக்காட்டிலும் அறிவையளிக்கும் குரு சிறந்தவர். குருவிற்கு ஒப்பாக ஒரு பொருள் இதுவரை உண்டாகவும் இல்லை. இனி உண்டாகப் போவதுமில்லை.

6. स्वर्गो धनं वा धान्यं वा विद्याः पुत्राः सुखानि च ।
गुरुवृत्त्यनुरोधेन न किंचिदपि दुर्लभम् ॥
(रामायणम् अयोध्या)

ஸ்வர்கோ தநம் வா தாந்யம் வா
வித்யா: புத்ராஸ்ஸுகாநி ச ।
குரு வ்ருத்யநுரோதேந ந கிஞ்சிதபி துர்லபம்

ஸ்வர்க்கம், செல்வம், தான்யங்கள், கல்வி, மக்கள் மற்றும் இன்பங்கள் இவைகளில், குருவின் கருத்திற்கிணங்கி நடப்பதால் அடையக் கூடாதது எதுவுமில்லை.

இந்த மேற்கோள்கள் இந்தியாவின் இரண்டு கண்களாகக் கருதப்படும் ராமாயணம், மஹாபாரதம் இவைகளிலிருந்து எடுத்தவை. இது போன்ற ஆயிரமாயிரம் மேற்கோள்கள் இவைகளில் மலிந்து கிடக்கின்றன.

குருவைப் போற்றுவது எவ்வளவு விரும்பத்தக்கதோ அவ்வளவு குருவை இகழ்வதோ அல்லது அவர் கருத்துக்கு முரண்படுவதோ விலக்கத்தக்கது :—

7. तेजस्वि नावधीतमस्तु मा विद्विषावहै (वेदः)
தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை ।

நம் கல்வி வலிமையுள்ளதாகவும் பிரகாசிப்பதாகவும் இருப்பதுடன் நாம்நமக்குள் துவேஷம் கொள்ளாமலிருப்போமாக.

8. नैवंविदुषाचार्यान्तेवासिनौ अन्योऽन्यस्मै द्रुह्याताम्
(वेदः)

நைவம் விதுஷாசார்யாந்தேவாஸிநௌ
அந்யோந்யஸ்மை த்ருஹ்யாதாம்|

குருவும் சிடனும் ஒருவரோடொருவர் துரோஹசிந்தை கொள்ளக்கூடாது.

9. यस्य साक्षाद्भगवति ज्ञानदीपप्रदे गुरौ ।
मर्त्यासद्धीः श्रुतं तस्य सर्वं कुञ्जरशौचवत् ॥
(भागवतम्)

யஸ்ய ஸாக்ஷாத் பகவதி ஞானதீபப்ரதே குரௌ |
மர்த்யாஸத்தீ: ச்ருதம் தஸ்ய ஸர்வம் குஞ்சர
[சௌசவத்||

ஞான தீபத்தை அளிக்கும் குரு கடவுளே. அவரிடம் மனிதன் என்ற எண்ணமோ அல்லது அவர் நல்லாரல்லர் என்ற எண்ணமோ எவன் கொள்ளுகிறுனே அவன் கல்வி யெல்லாம் யானையைக் குளிப்பாட்டுவது போல் வீணே.

10. ब्रह्मचर्यमहिंसा च दानानि विविधानि च ।
गुरुभिः प्रतिषिद्धस्य सर्वमेतदपार्थकम् ॥
(महाभा. अनुशा. 233.)

ப்ரும்மசர்யமஹிம்ஸா ச தாநாநி விவிதாநி ச|
குருபி: ப்ரதிஷித்தஸ்ய ஸர்வமேததபார்த்தகம் ||

குருவின் ஆசி பெருமல், அல்லது அவர் வேண்டாம் என்று தடுத்தும் கூட அதை மீறி, செய்யும் பிரம்மசர்யம், அஹிம்ஸை, அனேக தானங்கள் ஆகிய இவைகள் பயனை யளிக்கா.

இதற்கு உதாஹரணமாகத் திரிசங்குவின் சரிதமும், கர்ணனின் சரிதமும் உணரத்தக்கது; குருவினிடம் பக்தி பூண்டு பயனெய்தியவர்கள் ஏகலைவன் முதலியோர் என்பதும் தெளிவு.

மேற்கூறிய சான்றுகளிலிருந்து நம் பாரத நாட்டில் குருவின் மஹிமை எவ்வளவு ஏற்றத்தை யடைந்திருந்தது என்பது நன்குக விளங்கும். இந்த குருபக்திதான் இந்தி

யாவின் அறிவு வளர்ச்சிக்கும் ஆத்மஞானத்துறையில் மற்ற நாடுகளுக்கு அது வழி காட்டியாக இருப்பதற்கும் காரணம் என்று சிறிதும் ஐயமில்லாது கூறலாம்.

அவ்வாறு சிறப்பெய்திய குரு பக்தி இன்று நம் நாட்டில் குறைந்து வருவதை நாம் மறுக்க முடியாது. இன்று நம் சமூகத்தில் கல்வித்தரம் குறைந்து வருவதற்கும் அதனால் நாம் அடையும் இன்னல்களுக்கும் குரு பக்திக் குறைவுதான் காரணம் என்று துணிந்து கூறலாம்.

இக்குறையை நன்குணர்ந்து இதை விலக்கி குரு பக்தியைக் கூடியவரையில் நம் மக்களிடம் பரவச் செய்ய வேண்டும் என்றும், அதனால் அறநெறிவாயிலாகப் பேரின்பம் பெற்று நம்மக்கள் கடைத்தேற வேண்டும் என்ற பெரும் நோக்கத்துடன் பெருந்தகைமை பொருந்திய சேங்காலிபுரம் ஸ்ரீ ராமாநந்த ப்ரம்மேந்திர ஸ்வாமிகள் வெளியிட்டுள்ள "குருவின் முக்கியத்துவமும் மகிமையும்" என்ற உபதேசம் நம்மக்களிடம் குரு பக்தியைப் பரப்பி அதன் வாயிலாக அவர்களுக்கு நன்மை பயந்து நம் ஸ்வாமிகளின் மனத்தையும் களிப்புறச் செய்யும் என்று எல்லாம் வல்ல இறைவன் உருவாக விளங்கும் ஸ்ரீ தத்தாத்ரேய குருவை வணங்கிவேண்டுகின்றோம்.

ஸ்ரீதத்தாத்ரேய குருவை நேரில் தரிசித்து நாம் உஜ்ஜீவிக்கும் பொருட்டு சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகா சேந்தமங்கலம் கிராமத்தில் ஸ்ரீமத் ஸ்வயம் பிரகாச ப்ரம்மேந்திர அவதூத சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் **ஸ்ரீ தத்தர் ஆலயமும்**, தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் சமீபத்திலிருக்கும் சேங்காலிபுரம் கிராமத்தில் ஸ்ரீமத் ராமாநந்த ப்ரம்மேந்திர ஸ்வாமிகள் அவர்களால் ஸ்ரீதத்தகுடீரமும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள்,
வடமொழி ஆசிரியர்,
அண்ணாமலை நகர்.

பண்டித ராஜ V. சுப்பிரமணிய சாஸ்திரி,
வடமொழி ஆசிரியர்,
அண்ணாமலை நகர்.

॥ श्रीः ॥

श्रीदत्तात्रेयदशनामस्तोत्रम्

ஸ்ரீ தத்தாத்ரேயதசநாம ஸ்தோத்ரம்

दत्तात्रेयो हरिः कृष्णः उन्मादो नन्ददायकः ।
मुनिर्दिगम्बरो बालः पिशाचो ज्ञानसागरः ॥

தத்தாத்ரேயோ ஹரி: க்ருஷ்ண: உன்மாதோ நந்ததாயக: ।
முனிர்திகம்பரோ பால: பிசாசோ ஞானஸாகர: ॥

एतानि दशनामानि सर्वकाले सदा पठेत् ।
भूतापस्मारकोष्टार तापज्वरनिवारणम् ॥

ஏதானி தசநாமானி ஸர்வகாலே ஸதா படேத் ।
பூதாபஸ்மாரகோஷ்டார தாபஜ்வரநிவாரணம் ॥

कदा योगी कदा भोगी कदा नग्नपिशाचवत् ।
अनसूयागर्भसंभूतः दत्तात्रेयो महामुनिः ॥

கதா யோகீ கதா போகீ கதா நக்நபிசாசவத் ।
அநஸூயாகர்ப்பஸம்பூத: தத்தாத்ரேயோ மஹாமுநி: ॥

इति श्री दत्तात्रेयद्वादशनामस्तोत्रं संपूर्णम् ॥

இதி ஸ்ரீ தத்தாத்ரேய தசநாம ஸ்தோத்திரம்
ஸம்பூர்ணம்

श्रीदत्तो नारदो व्यासः शुकश्च पवनात्मजः ।
कार्तवीर्यश्च गोरक्षस्सप्तैते स्तुतिगायिनः ॥

ஸ்ரீதத்தோ நாரதோ வ்யாஸ: சுகச்ச பவநாத்மஜ: ।
கார்த்தவீர்யச்ச கோரக்ஷ: ஸப்தைதே ஸ்துதிகாயிந: ॥

कृतवीर्यसुतो राजा सहस्रभुजमण्डलः ।
अवतारो हरेः साक्षात् पालयेत्सकलां महीम् ॥

க்ருதவீர்யஸுதோ ராஜா ஸஹஸ்ரபுஜமண்டல: ।
அவதாரோ ஹரே: ஸாக்ஷாத் பாலயேத் ஸகலாம்
மஹீம் ॥

श्रीदत्तात्रेयार्पणमस्तु—*ஸ்ரீதத்தாத்ரேயார்ப்பணமஸ்து.*

॥ शुभम्—*சுபம* ॥

ப்ரும்மைவ ஸத்யம்.

குருவின் முக்கியத்துவமும், மகிமையும்

உலகில் ஸகல ஜீவராசிகளும் மனிதர்கள் உள்பட ஸுகத்தைத்தவிர வேறு ஒன்றையும் கோருவதில்லை.

'सुखं मे भूयात्; दुःखं मे मा भूत् ॥

அதில்மானிட ஜன்மா அடையக்கூடிய ஸுகமானது சாசுவதமாக இருக்கவேண்டும் என்பது ஒவ்வொருவருடைய எண்ணமும். ஆனால் சாசுவதமான ஸுகத்தை அடைய சுருதி, ஸ்ம்ருதி முதலான ப்ரமாணங்கள் இருந்தும் அதைக்கொண்டு ஆராய்ந்து தெரிந்துகொள்ளாமல் உலக விஷயங்களிலும் சிற்றின்பங்களிலுமே நிரந்தரமான ஸுகமிருப்பதாக பிரமிக்கிறார்கள். எல்லோருக்கும் ஸுகம் வேண்டுமென்கிற ஆசைதான். ஆனால் அதை அடைவதற்கு உபாயமோ, மார்க்கமோ தெரியாது; தெரிந்தவர்களிடமும் கற்றுக்கொள்ள ச்ரத்தை கிடையாது. இஷ்டம் என்னமோ ஸுகம்தான். பிரயத்தனங்களெல்லாம் துக்ககரமான செயல்களே. ஸுகப் பிராப்திக்கும், துக்க நிவர்த்திக்கும் தகுந்த உபாயங்கள் நம்முடைய சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. நமக்குத் துக்கம் வந்ததற்குக் காரணம் தெரியாது. ஆகையால் நாம் செய்துவரும் பிரயத்தனங்களெல்லாம் விபரீதப் பிரயத்தனங்களென்றே சொல்லவேண்டும். முன் சொல்லிய மாதிரி எல்லோருக்கும் சுகம்தான் வேண்டியது. ஆனால் பிரயத்தனம்தான் வித்தியாசம்.

पुण्यस्य फलमिच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः ।
न पापफलमिच्छन्ति पापं कुर्वन्ति यत्नतः ॥

புண்யஸ்ய பலமிச்சந்தி புண்யம் நேச்சந்தி மானவா:
ந பாபபலமிச்சந்தி பாபம் குர்வந்தி யத்னத:

என்றபடி புண்ணியத்தின் பலனை மட்டில் இச்சிக்கிறார்கள். புண்ணியம் மட்டும் செய்கிறதில்லை. விபரீதப் பிரயத்தனத்தினாலேயே சந்தோஷம் வருகிறதில்லை. ஏதோ முன் ஜன்ம ஸுகிர்த வசத்தால் அற்ப ஸுகம் ஏற்படுகிறது. அதை நிரந்தரமானதாக எண்ண முடியாது. நிரந்தரமான ஸுகி தான் ஸ்வதந்த்ரன் எனப்படுவான். நமக்கெல்லாம் துக்கம் ஜாஸ்தியாயும் ஏதோ கொஞ்சம் ஸுகம் மிச்ரிதமாயுமிருக்கிறது. துக்க நிவர்த்திக்கு சரியான வழி தெரியாது. ஆகையால் நாம் பரதந்திரர்கள். ஸ்வதந்திரனாகிய ஈசுவரனுடைய தயவை சம்பாதிக்க வேண்டும். அதற்கு சாஸ்திரப் பிரமாணத்தை ஒப்புக்கொள்ளவும் வேண்டும், ஸத்குருவை அடையவும் வேண்டும். வேத சாஸ்திரங்களோ அனந்தம்.

अनेक शास्त्रं बहु वेदितव्यं अल्पश्च कालो बहवश्च विघ्नाः ।
यत्सारभूतं तदुपासितव्यं हंसो यथा क्षीरमिवाम्बुमिश्रात् ॥

அனேக சாஸ்த்ரம் பகு வேதிதவ்யம்
அல்பச்ச காலோ பஹவச்ச விக்னா:

யத்ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்
ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிச்ராத்.

என்று சொல்லியிருக்கிறபடி ஸாரபூதத்தைத் தெரிந்துகொண்டு நடக்க வேண்டும். அதிலும் நல்ல காரியங்கள் தொடங்கும்பொழுது அநேக விக்னங்கள் வருகின்றன.

'श्रेयांसि बहु विघ्नानि' ச்ரேயாம்ஸி பஹூ விக்னானி

என்பது வாக்யம். ஸுகம் விச்வாமித்திரருக்கு தபசினால் வந்ததே தவிர ராஜ்யத்தினால் வந்ததில்லை. ஆகையால் வேத சாஸ்த்ர ப்ரமாணத்தை நம்பி ஸத்குருவை அடைந்து வர்ணாசிரம அநுஷ்டானப்படி நடந்தால் ஸுகப்ராப்தியும் துக்க நிவர்த்தியும் (அடைவதோடு சிரேயஸ்ஸையும்) அடைவார்கள். அவ்விதமான ஸுகம் மூன்று விதம் 1. அதமம். 2. மத்யமம். 3. உத்தமம்.

அதம ஸுகம் என்பது லௌகிகமான முறைகளால் இந்திரியாதிகளுக்கு ஸுகத்தைக் கொடுப்பது. இதுதான் பெரும்பாலோர் விரும்புவது. ஆனல் இந்த ஸுகம் நீடித்திராது. அதோடு இதன் மத்தியில் துக்கமும் பெறலாம். இந்த ஸுகங்கள் எல்லோருக்கும் சமமாக இருப்பதில்லை. ஒருவருக்கு ஹிதமாக உள்ளது மற்றவருக்கு அஹிதமாக இருக்கிறது.

மத்யம ஸுகம் ச்ரௌதஸ்மார்த்த கர்மாக்களால் மறுமையிலோ, இம்மையிலோ அடையும் சுகம். இந்த ச்ரௌதஸ்மார்த்த கர்மாக்கள்—தேவாதிகளுக்குப் பூஜை செய்வது, சத்திரம், சாவடி, தண்ணீர்ப்பந்தல், தேவாலயம் கட்டிவைத்தல், குளம் வெட்டுதல் முதலியன. இவ்வாறு இருந்தாலும்

क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति

க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி.

என்பதற்கிணங்க புண்ணியத்தினுடைய பலன்கள் முடிவடைந்ததும் மறுபடியும் ஜன்மம் எடுக்கவேண்டியது.

உத்தம ஸுகம் என்றுலோ ஸர்வ ச்ரேஷ்டமான மோக்ஷமே. மோக்ஷம் என்பதற்கு விடுதலே என்பதுதான் தாத்பர்யம். விடுதலே என்பது ஜனன மரணத்திலிருந்து விடுபடுதல். அதைத்தான் நித்யானந்தம் என்றும் ப்ருமாநந்தம் என்றும் சுருதி, ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றன. இப்படி மூன்றுவித ஸுகங்கள் இருந்தாலும் உத்தம ஸுகத்தை அடையத்தான் மனுஷ்ய ஜன்மா எடுத்திருக்கிறும் என்று அச்சுகத்தை அடைய முயலவேண்டும். அப்படி முயலுவதற்கு சாஸ்த்ரம், ஸ்ம்ருதி, சுருதி இவைகளின் மூலமாகத்தான் தெரிந்து கொள்ளவேண்டும். சுருக்கமாகச் சொல்லின்' ஒவ்வொரு மனிதனும் அவரவர்கள் வர்ணுச்ரமத்திலிருந்து தவருமல் நித்ய நைமித்திக கர்மாக்களே, சிரத்தையுடன், — பலத்தை எதிர்பாராமல் செய்து, கிரமமாக குருப்ராப்தி மூலமாக ஞானத்தையடைந்து, அதன் மூலமாக ஜனன மரணத்திலிருந்து விடுபெறலாம். இதற்காக சுருதி, ஸ்ம்ருதிகளில் அதிகார பேதத்துக்குத் தகுந்தபடி சாதனம் செய்ய வழி சொல்லியிருக்கிறது.

தற்காலத்தில் நமக்கு விச்ராந்தியாக சுருதி, ஸ்ம்ருதிகளைக் கற்கவோ, ஆயுட்கால நீடிப்போ இல்லாமலிருப்பதால் இவைகளை யெல்லாம் பெற்ற குருவையடைந்து ச்ரவண மனனாதிகளால் விடுதலை யென்னும் மோக்ஷத்தை அடைய வேண்டும். நிரந்தர ஆநந்தத்துக்கு வழி காட்டுபவர்களே ஸத்குரு எனப்படுவார்கள். சிலர் குரு இல்லாமலேயே ஸகல வித்தைகளையும் கற்றுக்கொள்ளலாமென்று நினைக்கிறார்கள். அது குளிக்கப்போனவன் சேற்றைப் பூசிக் கொள்ளுவதுபோலவும், கடல் நீரால் தாகத்தை தீர்த்துக் கொள்ளுவது போலவுமாகும். ஏனென்றால் ஜீவ, ப்ரும்ம-ஐக்யத்தையே பரம தாத்பர்யமாகவுடைய வேதம், ஸ்ம்ருதி, புராணம், இதிஹாஸம் முதலியவைகள் கடலுக்கு சமமாகச் சொல்லியிருக்கின்றது. எப்படி கடல் ஜலம் ஆவியினால் மேகமாகிப்போய் குடிக்கும் நீராக மேகம் செய்கிறதோ அதுபோல குரு. அவர் பரம தாத்பர்யமாகிய விடுதலையை அதிகாரி பேதங்களுக்குத் தக்கபடி உபதேசிப்பவர். லௌகிக படிப்பிற்கே குரு வேண்டியிருப்பதால் மோக்ஷ ஸாதனத்துக்கு குரு இல்லாமல் முடியாது. சுகோபாக்யானத்தில் சுகருக்கு ஏற்கனவேயே ஞானமிருந்தும் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அஞ்ஞானம் இருந்ததால் அதைப் போக்க ஜனகராஜன் குருவானார். குழந்தைக்கு எல்லா வஸ்துக்களும் தெரிகின்றதோ? இது குடம், இது வேஷ்டி என்று பிரித்து தெரிந்துகொள்ளுகிறதோ? ஒருவன் சொல்லிக்கொடுத்துத்தானே தெரிகிறது. அப்படியேதான் ஸகல ஞானமும் குருவால்தான் தெரிந்து கொள்ள முடியும். இந்த ஸத்யத்தை நன்றாய்த் தெரியப் படுத்துவதற்காக ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணன், மதத்ரயஸ்தர்கள், குருபஸதனம் செய்தார்கள். சகடாசுரன், தேனுகாசுரன், பூதனை இவர்களை குழந்தைப் பிராயத்திலேயே ஒருத்தரும் சொல்லிக்கொடுக்காமல் தானாகவே அவரவர்கள் வாஸ்தவமான நிலையை அறிந்து வதம் செய்த ஸர்வக்ஞனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஸாந்தீப முனிவரும், ஸ்ரீராமருக்கு வஸிஷ்டரும், ஸ்ரீசங்கரருக்கு கோவிந்த பகவத்பாதாள் அவர்களும் என்னத்திற்கு? அவர்களுக்குத் தெரியாததை

குரு உபதேசிக்கப்போகிறார்களோ? லோகத்திற்குக் காட்ட வேண்டிய நிமித்தம் குருவை அடைந்தார்கள். ஸ்ரீஸதாசிவப் ப்ரம்மேந்திராள் "பிரபமைவாஹம் கில" என்கிற கீர்த்தனத்தில் தன் குரு மூலமாகவே ப்ரும்மம் வேறு, குரு வேறு, தான் வேறு என்கிற அஞ்ஞானத்தை போக்கடித்துக் கொண்டதாகப் பாடியிருக்கிறார்கள். அதை அநுசரித்தே

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः குருர் ப்ருப்ஹ்மா குருர் விஷ்ணு:

என்று குருவை ப்ரும்மமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. குருதத்துவமானது பரமேசுவர தத்துவத்தைவிட உயர்வானதென்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

शिवे रुष्टे गुरुस्त्राता गुरौ रुष्टे न कश्चन ॥

சிவே ருஷ்டே குருஸ்த்ராதா, குரௌ ருஷ்டே ந கச்சன.

சிவன் கோபத்தை குருவால் தணித்துவிடலாம். குருவின் கோபத்தை யாராலும் தணிக்கமுடியாது. திருவிடமருதூரில் பிக்ஷு சாஸ்த்ரிகள் என்பவர் குரு வார்த்தையை மீறி நடந்ததால் இரண்டு கண்களும் குருடாய்விட்டதாகவும் பிறகு சிதம்பரத்திற்குப் போய் தன் உபாஸனா மூர்த்தியாகிய ஸ்ரீநடராஜரை குருவாக ஸ்தோத்தரித்ததின்பேரில் ஒரு கண் கொடுத்து, நீ குரு துரோகம் செய்ததால் மற்றொரு கண் வராது என்று ஸ்வப்னத்தில் ஸ்ரீநடராஜர் சொன்னதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதுவும் நடராஜரைக் குருவாக தியானித்து ஸ்துதி செய்ததால் ஒரு கண்ணாவது கிடைத்தது. பரமேசுவரன் ஸ்ருஷ்டி முதலிய க்ருத்தியங்களை மாயையோடு கூடி செய்கிறபடியால் அவரை மாயா விசிஷ்ட சேதனர் என்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸத்குருவோவெனில் சுத்த சைதன்ய ஸ்வரூபர். மாயா காரியங்களும், க்ருத்யங்களும் அவரிடம் கிடையாது. குரு மகிமை ப்ரபஞ்ச அதீதமானது. யாராலும் நிர்ணயிக்க முடியாதது. பரமேசுவரன் தக்ஷிணாமூர்த்தி குருவாக வரவில்லையா? அவர் குரு வடிவமாக வந்தபோது லீலைகளைக் கொண்ட மாயையை நீக்கி சுத்த சைதன்யரானார். 'கு' என்றால் தத்துவ ஞானத்தைக் கொடுத்தல். 'ரு' என்றால்

அந்த ஞானத்தை அனுபவத்துக்கு வரும்படி செய்தல். உகரம் என்பது ஆத்ம ஞான அனுபவத்தால் ப்ரும்ம ஐக்யத்தை உணர்தல். (குரு தத்வ விமர்சனம்) இவைகளை உபதேசிப்பவர் குரு. ப்ரணவம் எப்படி அகர, உகர, மகர மூன்று எழுத்துக்கூடியதோ அப்படியே குருவும் மூன்று எழுத்து உடையவரானபடியால் அவரே ப்ரணவமும் ப்ரும்மமும். ஸ்தூலமாக 'கு' என்றால் அக்ஞான இருட்டு என்றும் 'ரு' என்றால் இருட்டை போக்கடிப்பவர் என்றும் அர்த்தம் சொல்வதுண்டு. எப்படி நெய்யானது ஆயுளை விருத்தி செய்வதால் ஆயுஸ் என்று சொல்லப்படுகிறதோ அதேமாதிரி அக்ஞானத்தைப் போக்கி ஞானத்தை அளித்து சாசுவதமான ஸுகத்தை அளிப்பவருக்கு 'குரு' என்று பெயர்.

குருவின் மஹிமையைப்பற்றி அளவுக்கு உட்படாமல் சொல்வதாய் இருந்தாலும் சில விஷயங்கள் குறிப்பிடத்தக்கதாகவே இருக்கிறது. எப்படி என்றால் விலையுயர்ந்த கௌரவம் கொண்ட ஸ்பர்சவேதி தான் தொட்டதை மட்டிலும் தன்னைப்போல செய்யும் மஹிமையுடையது. ஆனால் குருவோவென்றால் தான் தொட்ட சிஷ்யனை, தானாகவே ஆக்கி தன் சிஷ்யனையும், தன்னைப்போல் மற்றவர்களையும் தன் ஸ்வரூபமாகவே ஆகும்படி செய்து விடும் சக்தியுள்ளவராகச் செய்து விடுவார். மற்றும் ஒரு தனிகனை பல திருடர்கள் அவயவங்களை யெல்லாம் கட்டி நடுக்காட்டில் விட்டு விட்டுப்போய் விட்டால் அவன் கதறிக் கொண்டு விடுதலைக்குப் பிரயத்னப்படுகிறான். அச்சமயம் ஒருவன் தோன்றி கட்டுகளை அவிழ்த்து விட்டு ஒரு வழியை காண்பித்துப் போ என்று சொன்னால் எப்படிச் சந்தோஷப்படுவானோ அதே போல் காமம், குரோதம் முதலிய திருடர்களால், மாயை என்னும் கயிற்றால் கட்டப்பட்டு, ஸம்ஸாரக் காட்டில் தவித்துக் கொண்டிருக்கும்போது நமக்கு நன்மார்க்கத்தை உபதேசித்து வழியைக் காட்டுபவர் யாரோ, அவர் தான் குரு என்பவர்.

குரு இல்லாமல் வித்தையை கற்க முடியாது என்பதை விளக்கவே ஏகலைவன் என்னும் வேடன் துரோணரைப் போல் பிரதிமை செய்து வைத்து அதனிடத்தில் அத்யந்த குரு பக்தியைக் காட்டித் தான் வில் வித்தையைக் கற்றுக் கொண்ட விஷயம் யாவருக்கும் தெரியுமாதலால் இக்கதையும் குருவின் முக்கியத்தை ருசிப்பிக்கிறது.

சிலர் குருவை அடைந்தும் ஞானத்தை அடையாத காரணங்கள் சிலவற்றைக் கூறும் ஸூதஸம்ஹிதையிலுள்ள வாக்கியங்கள் தமிழர்த்தத்துடன் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது. ஸூதஸம்ஹிதையில் முக்தி காண்டத்தில் ஆருவது, ஏழாவது அத்தியாயங்களில் குருவின் மஹிமையைப் பூர்த்தியாக விளக்கிக் காட்டியிருக்கிறது.

(28—33) **गुरोरनिष्टाचरणं गुरोरिष्टविवर्जनम् । गुरोश्च सेवाऽकरणं ज्ञानानुत्पत्तिकारणम् ॥ (ईश्वरे च गुरौ देवे ज्ञाने वाऽभक्तिरच्युत । तथा स्वगुरुसन्ताने ज्ञानानुत्पत्तिकारणम् ॥) स्वाचार्याय महाभक्त्या स्वदेहस्यानिवेदनम् । निवेदनं तथान्यस्मै ज्ञानानुत्पत्तिकारणम् ॥ आचार्ये बालबुद्धिश्च नरबुद्धिस्तथैव च । अशिष्टबुद्धिर्भूनाथ! ज्ञानानुत्पत्तिकारणम् ॥ आचार्यनिन्दाश्रवणं तद्बाधस्य च दर्शनम् । विवादश्च तथा तेन ज्ञानानुत्पत्तिकारणम् ॥ आचार्येऽनीश्वरज्ञानमुपेक्षा च तथैव च । तदुक्तविस्मृतिश्चापि ज्ञानानुत्पत्तिकारणम् ॥**

குரோ: அநிஷ்டாசரணம். குரோ: இஷ்டவிவர்ஜனம். குரோச்ச ஸேவாகரணம் ஞான அனுத்பத்தி காரணம் (ஈச்வரே ச குரௌ தேவே ஞானே வா அபக்திரச்யுத । ததா ச குரு சந்தானே ஞான அனுத்பத்தி காரணம் ।) ஸ்வாசார்யாய மஹாபக்த்யா ஸ்வதேஹஸ்ய-அநிவேதனம் । நிவேதனம் ததா அன்யஸ்மை ஞான-அனுத்பத்தி காரணம் । ஆசார்யே பாலபுத்திச்ச நரபுத்திஸ்ததைவ ச । அசிஷ்ட புத்தி: பூநாத! ஞான-அனுத்பத்தி காரணம் । ஆசார்ய-நிந்தா ச்ரவணம் தத்பாதஸ்ய ச தர்சனம் । விவாதச்ச ததா தேந ஞான-அனுத்பத்தி காரணம் । ஆசார்யே அனீச்வர

ஞானம் உபேக்ஷா ச தத்தைவ ச । ததுக்த விஸ்ம்ருதிச்சாபி ஞான-அனுத்பத்தி காரணம் ।.

அதேபோல் பகவத் கீதையிலும் 4-ம் அத்தியாயத்தில் 34, 40-ம் சுலோகங்கள்.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनः तत्वदर्शिनः ॥
अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥

தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானின: தச்வ தர்சின: ।
அஞ்ஜச்சாச்ரத்ததானச்ச ஸம்சயாத்மா வினச்யதி
நாயம் லோகோஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்சயாத்மன: ।
என்று பரமாத்மா கிருஷ்ணன் சொல்லுகிறார்.

(28-33) குருவிற்கு இஷ்டமில்லாததைச் செய்வது, பிரியமுள்ளதை செய்யாமலிருப்பது, சுச்ரூஷை செய்யாமலிருப்பது ஞானம் ஏற்படாததற்கு காரணம்.

ஈசுவரனிடமும், குருவினிடமும், தேவர்களிடமும், குருபுத்ரனிடமும பக்தியில்லாமல் இருப்பது ஞானம் உண்டாகாமலிருப்பதற்குக் காரணமாகிறது.

குருவினிடம் மஹாபக்தியோடு தன்னை அர்ப்பணம் பண்ணாமலிருப்பதும், குரு அல்லாத மற்றொருவரிடத்தில் தன்னை அர்ப்பணம் பண்ணுவதும் ஞானம் ஏற்படாமலிருப்பதற்கு காரணம்.

குருவினிடத்தில் அவர் சிறுவன் என்ற புத்தியும், கேவலம் மனுஷ்யன் என்ற புத்தியும், ஆசாரமில்லாதவர் என்ற புத்தியும் ஞானம் உண்டாகாததற்கு காரணம்.

குரு நிந்திக்கப்படுவதைக் கேட்பது, அவரை ஹிம்ஸை பண்ணுவதைப் பார்ப்பது, அவரோடு குதர்க்கம் செய்வது ஞானம் உண்டாகாததற்கு காரணம்.

குருவினிடம் அவர் ஈசுவரனில்லை என்ற புத்தி, அவரை அவமதிப்பது, அவர் சொல்வதை மறப்பது, இவைகள் ஞானம் உண்டாகாததற்குக் காரணம்.

गुरुं हुंकृत्य त्वंकृत्य विप्रं निर्जित्य वादतः ।
श्मशाने जायते वृक्षः कङ्कगृध्रोपसेवितः ॥

குரும் ஹூம்க்ருத்ய த்வம்க்ருத்ய விப்ரம் நிர்ஜித்ய
[வாதத:
ச்மசானே ஜாயதே விருக்ஷ: கங்கக்ருத்ரோபஸேவித:

ஆசார்யனை கோபத்தால் அதட்டுவதும், வெருட்டுவதும், அந்தணனை வாதத்தில் வென்று அவனை மனம் நோகச் செய்வதும் ஆகிய இந்த பாபச்செயல் காரணமாக மயானத்தில் கழுகு, பருந்து இவைகள் வசிக்கும் மரமாக பிறப்பெய்துகிறான்.

உலகில் தோன்றிய பௌத்தம், க்ருஸ்துவம் முதலிய மதங்கள் அனைத்தையும் உற்றுநோக்குவோமாகில் தனக்கென குரு ஒருவரை அமைத்துக் கொண்டு பிறகுதான் சிஷ்யர்கள் மதத்தை பரப்பினார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகவே எந்த நல்விஷயத்தையும் அறிந்து கொள்வதற்கு குருவையே மனிதன் முதலில் நாடவேண்டும். நமது ப்ராசீனவரலாறுகளை ஆராய்ந்தால் எவரும் குருவை அடையாமல் ஞானத்தைப் பெற்றதாகக் காணமுடியாது. "ஆசான் சார்ந்தவை அமைவரக் கேட்டல்" என்ற பழைய தமிழ் செய்யுள் ஒன்று குருமூலமாகவே விஷயங்களை அறியவேண்டுமென்று சொல்லுகிறது. மனிதன் இம்மையில் நல்வாழ்வு வாழ்வதற்கும் மறுமையில் மோக்ஷமென்னும் விடுதலை அடைவதற்கும் குருவே முதற்காரணமானவர் என்று நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

ஆகையால் நாம் ஒரு காரியத்தை ஆரம்பிப்பதற்கு முன் குருவை த்யானித்தும் ஸ்தோத்தரித்தும் ஆரம்பித்தால் தொடங்கிய காரியம் ஜெயமாகவும், சுபமாகவும் முடியுமென்பது ஸத்யம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ ஸத்குரு பரப்ரம்ஹணே நம:

ஸ்ரீ தத்தாத்ரேய த்வாதச நாம ஸ்தோத்ர ப்ராரம்ப:

ஸங்கல்பம்:— அஸ்ய ஸ்ரீ தத்தாத்ரேய த்வாதசநாம ஸ்தோத்ரஸ்ய, பரம ஹம்ஸ ரிஷி:, அநுஷ்டுப் சந்த:, ஸ்ரீ தத்தாத்ரேயோ தேவதா. ஓம் பீஜம். ஹ்ரீம் சக்தி:, க்ரோம் கீலகம், மம ஸர்வாரிஷ்ட நிவ்ருத்தி பூர்வக ஸகலாபீஷ்ட ஸித்யர்த்தே ஜபே விநியோக:

ப்ரதமஸ்து மஹாயோகீ த்விதீய: ப்ரபவேச்வர:।
த்ருதீயச்ச த்ரயோமூர்த்தீ சதுர்த்தோ ஞானஸாகர:॥
பஞ்சமோ ஞானவிஞானீ ஷஷ்டோ வை ஸர்வ மங்கள:।
ஸப்தம: புண்டரீகாக்ஷ: அஷ்டமோ தேவ வல்லப:॥
நவமோ நததேவேசோ தசமோ நந்ததாயக:।
ஏகாதசோ மஹாருத்ரோ த்வாதச: கருணாகர:॥
இதி த்வாதச நாமானி தத்தாத்ரேய மஹாத்மன:।
மந்த்ரராஜம் ச விக்யாதம் ஸர்வ பாபஹரம் பரம்॥
க்ஷயாபஸ்மார குஷ்டாதி தாபஜ்வர நிவாரணே।
ராஜத்வாரே பயே கோரே ஸங்க்ராமேஷு ஜலாந்தரே॥
கிரிகஹ்வர மாரண்யே வ்யாக்ரே சோர பயாதிஷு।
ஆவர்த்தநஸஹஸ்ரேண லபதே வாஞ்சிதம் பலம்॥
த்ரிகாலம் படதே யஸ்து ப்ரயத்நேந த்விஜோத்தம:
மோக்ஷ ஸித்திமவாப்நோதி புக்திமுக்திர்ந ஸம்சய:॥

இதி

ஸ்ரீ தத்தாத்ரேய த்வாதச நாம ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ தத்த குடீர வெளியீடுகள் :—

1.	தத்தலஹரி (தமிழ் உரையுடன்)	1—4—0
2.	தத்த ஸ்தோத்ர தரங்கணி	1—4—0
3.	வேதாந்த ஸித்தாஞ்சனம்	0-12
4.	குருவின் முக்யத்வமும், மகிமையும் (தமிழில்)	0—4-

இடைக்குமிடம் :—

ஸ்ரீ S. பாலகிருஷ்ண பட்டாசாரியார்,
சேங்காலிபுரம் P. O.
(Via) கொடவாசல்,
தஞ்சாவூர் ஜில்லா.

31

लक्षणावलिः

जिसे

...लाल नागरी कापीनवीस अमृतसर

நெ. 934

உ

தஞ்சைபுரி

ஸ்ரீ ...ங்கரவிலாச சாரதாமந்திரத்திற்கு,

इस पुस्तक की रजिस्टरी कराई गई है इस लिये कोई महाशय छापने या छपाने का उद्योग न करें नही तो लाभ के बदले हानि उठानी पड़ेगी ॥ ० ॥

(नोट) हमारे यहां सब प्रकार के पुस्तक बिक्री के लिये मौजूद हैं ॥ ० ॥ ० ॥

ननु गणेशत्वं नाम किम् ?

विघ्न विनाशनानुकूल व्यापार विशिष्टत्वं गणेशत्वम् ॥१॥ एकत्वं संख्या वच्छिन्नरद न विशिष्टत्वं वा गणेशत्वम् ॥२॥ करीन्द्र सदृशानन विशिष्टत्वे सत्यन्य सर्व मानव शरीर विशिष्टत्वं वा गणेशत्वम् ॥३॥ इभ मस्तक विशिष्टत्वे सति गजेन्द्र भिन्नत्वं वा गणेशत्वम् ॥४॥ गिरिजा शरीर जन्म मल निरूपित जन सम्बन्ध विशिष्टत्वम् वा गणेशत्वम् ॥५॥ नान्दे केश्वरादि प्रसिद्ध गणाधिपतित्व विशिष्टत्वं वा गणेशत्वम् ॥ ६ ॥

ननु कौमुदी त्वं नाम किम् ?

माङ्गलिक श्लोका व्यवहितोत्तर शिव प्रणीत प्रत्याहार प्रयोजक चतुर्दश सूत्र घटितत्वे सति प्रकृति, प्रत्यय विभाग पूर्वक संहिता प्रयोजक पद सिद्धि प्रकाशक सूत्र वृत्तिकादि घटित वाक्य समुदायत्वं कौमुदीत्वम् ॥

ननु सूत्रत्वं नाम किम् ?

अल्पाक्षरत्वे सति बह्वर्थ बोधकत्वं सूत्रत्वम् । इति चेत् ॥ हरि शब्दे प्यतिव्याप्ति रल्पाक्षर विशिष्टत्वे सति बह्वर्थ बोधकत्वात् ॥ यथा ॥ हरि रिन्द्रो हरिर्भानु र्हरि र्विष्णु र्हरिर्मरुत् । हरिः सिंहो हरिर्भेको हरि र्वाजी हरिः कपिः (हरि शब्दस्य बह्वर्थ बोधकत्वात्) अथवाल्पाक्षर विशिष्ट पूर्वक वृत्ति परिच्छेदकत्वे स[ति] बह्वर्थ बोधकत्व सूत्रत्वम् ॥ इति चेन्न वक्तव्यम् ॥

अइउणित्पाद्य व व्याप्ते र्हानि परिच्छेदकाभावात् ॥ अथ अष्टाध्यायी पठितत्वाभावात् ॥ अथवा संज्ञा परिभाषा विधि नियमाति देशाधिकार घटकान्य तमत्वं सूत्रत्वम् ॥१४॥ तन्न ॥ यथा घटत्व ज्ञानाभावे यन्नीलोघट: पीतो घट इत्यादि ज्ञाना संभवात् तथाच सूत्र ज्ञानाभावे संज्ञा परिभाषादि सूत्र विभेदज्ञानासंभवात् अथवा पाणिनीय निर्मितत्वं सूत्रत्वम् ॥ तन्न ॥ वेदांत सूत्राणां पाणिनीय निर्मितत्वा भावात् ॥ एवं ॥ अष्टाध्यायी पठितत्वं सूत्रत्वं नो सम्यक् ॥ वेदांत गौतम सूत्राणां सूत्रत्वं नस्यात् ॥ पूर्व कालिक फणीश कृत भाष्य चरी कृति विवृति विशिष्टत्वं वा सूत्रत्वम् ॥ तन्न ॥ गौतम सूत्रेषु फणीश कृत भाष्या भावात् नच भाष्य विवृति विशिष्टत्वं सूत्रत्वम् ॥ तर्हि गीताया अपि सूत्रत्वा पत्ते शंकर कृत भाष्य विशिष्टत्वात्

तस्मात् सूत्रस्य लक्षणं किम् ?

अल्पाक्षर विशिष्ट बह्वर्थ बोधक पूर्व कालिक भाष्य विवृत्ति संयुक्तत्वे सति तत्तच्छास्त्र मूलभूतत्वं सूत्रत्वम् २१

ननु वृत्तित्वं नाम किम् ?

विशद सूत्रार्थाधिकरणीभूतत्व वृत्तित्वम् ॥२२॥ तन्न ॥ वक्तव्यं ॥ विशद सूत्राधि करणीभूतत्वस्य मनोरमाया अपि सत्वात् ॥ अथवान्यसूत्रा कृष्ट पद विशिष्टत्वे सति ॥ सूत्रार्थ निरूपकत्वं वृत्तित्वम् ॥२३॥ तन्न वक्तव्यम् ॥ पा ध्वाध्मेति सूत्र वृत्तावल्याक्षरत्वात् ॥२४॥ अथवा सूत्रतात्प-

र्य्यार्थ निरूपकत्वम् वृत्तित्वम् ॥२५॥ तन्न वक्तव्यम् ॥ सूत्र तात्पर्य्यार्थ निरूपणस्य तत्व बोधिन्यामपि सत्वात् ॥ २६ ॥ अथवा वृत्तिकार निर्मित्त सूत्रतात्पर्य्यार्थ निरूपकत्वं वृत्तित्वम् ॥ तन्नवक्तव्यम् ॥ एत्येधत्यूठ स्विति सूत्रो परिवृत्ति कृता व्याख्यातमत्रे ते रेव विशेषणं नत्वेध-तेर् व्यभिचारात् ॥ नाप्यूडो असंभावादिति वृत्तिकार इति व्याख्यानस्यापि वृत्तिकार निर्मित तत्वात् वृत्तित्वा पत्तेः ॥२८॥ अथवाऽस् धातु प्रयोग घटितत्वं वृत्तित्वम् तन्न वक्तव्यम् ॥ तस्मिन्निति सूत्र वृत्तावस् धातोः प्रयोगा: भावात् ॥ ३० ॥

कि न्नाम वृत्तित्वम् ?

सूत्रार्थाधिकरणत्व पूर्वक तात्पर्य्यार्थी न्नायकत्व विशिष्टत्वे सति वृत्तिकार निर्मितत्वं वृत्तित्वम् ॥ एवंच नातिव्याप्तिः तत्वबोधिन्याः सूत्रार्थाधिकरणत्वे सत्य वृत्तिकार निर्मितत्वेपि सूत्र तात्पर्य्यार्थी नायकत्वाभावात् ॥ नच तस्यापि सूत्र तात्पर्य्यार्थी नायकत्व मेव ॥ कौमुद्यधिकरणक सूत्रार्था विशिष्टत्व पूर्वक तात्पर्य्यार्थी न्नायकत्व विशिष्टत्वे सति वृत्तिकार निर्मितत्वं वृत्तित्वम् ॥३४॥

संज्ञात्वं नाम किम् ?

सांकेतिक पदजन्य बोधनानुकूल व्यापार वतीसंज्ञा ३५

ननु प्रत्याहारत्वं नाम किम् ?

वरण संक्षेपाधिकरणता विशिष्टत्वं प्रत्याहारत्वम् ॥ ३६

संज्ञया धातु संज्ञाया वाधः परत्वाद्धातुः संज्ञयैव तद्बा
धात् ॥ इतिचेन्न० ॥ अदः सर्वेषामिति ज्ञापकात् प्रा
तिपदिक संज्ञैयेव वाधः ॥ ८० ॥ एवमपिना अगति ग
तित्वात् किञ्चयाः पश्यंतीत्यादावातो धातो रित्या
कार लोप प्रसङ्गात् ॥ ८१ ॥ नचस्वार्थ निमित्त कदाचि
दापो वहिरंगाद सिद्धत्वम् । नाप्यंतरंगजान तर्प्यंवहिस्ट
प्ल्किषिन्न रिति निषेधात् ॥ ८२ ॥ नच लक्षण प्रति पदोक्त
परिभाषया नदोषः तस्याधातुत्व प्रतिपत्तेः ॥ ८३ ॥ नच
वार्त्तिक कारमते अतोनाप इति वर्त्तते तत्रापः सत्वात् ।
तथा पाणिनि विरोधात् यथोत्तरं मुनीनां प्रामान्य मित्यु-
क्तत्वात् सूत्राद्वार्तिकं वलीयइति ॥ ८४ ॥ वा इत्यव्यये ।
अतिप्रसंगस्तथाच विकल्पार्थ वाचको वातीति प्रयोगः
स्यात् तत्र लक्षण प्रति पदोक्त परिभाषाया:अप्रवृत्तेः
८५ ॥ नचगति गधनात्पर्था देशोनियामकः । तस्य भीः
मसेनादि पंडित कृतत्वेन प्रमाणाभावात् ॥ भाष्येच
तद्दर्शनात् ॥ ८६ ॥

किं चान्योन्यआश्रया दोषः कथम् ?

धातु बोधं विना क्रियात्व बोधा भावात् । क्रियात्व बोधं
विना धातुत्व ज्ञानासंभवाच्च परस्परा को क्षोत्थाय क
ता वच्छेदकी भूतत्वे सति परिबोधेक प्रतिबंधक ताव-
च्छेदकी भूतत्वमन्यो न्याश्रयत्वम् । न चान्योन्या श्रयो
गुणः । यथात्वममाश्रयो मम तवाश्रय इति । तथापि शा-

स्त्र दोष एव। यथावरिवद्धा नरिर्घ्मडिति तथा शास्त्र विघात: स्यात्॥ नच फल व्यापार वाचकत्व मेव धातुत्वं। तत्राप्यन्योन्याश्रयत्वात्। दूषणो द्धारस्तुभाष्ये स्पष्टी कृत:॥८८॥ नच क्रिया वाचकत्वं धातुत्व मित्येवास्तु। तर्हिहिरुक नानेत्यादा वति व्याप्ति: स्यात्, वर्ज्जनादि रूपक्रिया वाचकत्वात् अतोयथोक्त मेवसाधीय:॥८९॥

व्यापारत्वंच नाम किम्?

साध्यत्वेना विधीयमानत्वं व्यापारत्वम्॥९०॥

क्रियात्वं नाम किम्?

साध्यत्वेना विधीय मानत्वं क्रियात्वम्॥९१॥

किं फलत्वम्?

व्यापार जन्यत्वं फलत्वम् ॥९२॥

अकर्मकत्वं किम्

फल व्यापारयो रेकाधिकरण वृत्तित्वं कर्म्म कत्वम्९३

सकर्म्मकत्वंच किम्?

फलव्यापारयो रेकाधिकरणा वृत्तित्वं सकर्म्म कत्वम्९४

शाब्द बोधत्वं नाम किम्?

शब्दार्थ बोधो जनक तावच्छेदकी भूतत्वं शाब्द बोधत्वम्९५॥ कारकत्वं नाम किम्?

विभक्ति द्वारा क्रियान्वयित्वं कारकत्वम्॥९६॥

किं कर्तृत्वम्?

सर्व कारक प्रयोजकत्वे सति धातूपात्त व्यापाराश्रय त्वं कर्तृत्वम् ॥९७॥

किं कर्मत्वम् ?

धातूपात्त फलाश्रयत्वं कर्मत्वम् ॥९८॥

करणत्वं नाम किम् ?

यदनंतर मव्यवधानेन फलोत्पत्तिस्तत्करणत्वम् ९९

सम्प्रदानत्वं किम् ?

कर्त्रभीप्सत्वे सति कर्तृ प्रयोजित दानानुग्रहणानुकूल व्यापार विशिष्टत्वं सम्प्रदानत्वम् १००

अपादानत्वं किम् ?

तस्माद्वस्तुन: प्रश्लेषो जायते तदपादानत्वम् ?

अधिकरणं किम् ?

कर्तृ कर्म्म द्वारा तन्निष्ट क्रिया धारभूतत्व मधिकरणत्वम् ॥ समासत्वं किम् ?

अनेकपदानामेक पदी भवनानुकूलो व्यापार: समास: ॥स षड्विध:॥ १०२

अव्ययी भावत्वं किम् ?

पूर्व. पदार्थ प्रधानो ऽव्ययी भाव: ॥१०३॥

किं तत्पुरुषत्वम् ?

उत्तर पदार्थ प्रधानत्वं तत्पुरुषत्वम् ॥१०४॥

किं द्वंद्वत्वम् ?

उभय पदार्थ प्रधानत्वं द्वंद्वत्वम् ॥१०५॥

बहुव्रीहित्वं किम् ?

अन्य पद प्रधानत्वं बहुव्रीहित्वम् ॥ १०६॥

कर्मधारयत्वं किम् ?

तत्पुरुष समानाधि करणत्वं कर्मधारयत्वम् ॥१०७॥

द्विगुत्वं किम् ?

संख्या पूर्वकत्वं द्विगुत्वम् ॥१०८॥

तद्धितभावस्य किं लक्षणम् ?।

एकत्व विशिष्टत्वे सत्यनेक पद निर्वाहा धिकरणाक

वरी वृत्त मानता समवेतत्वम् । तद्धितो भवनादि

रूपित प्रत्यय निबोधकता शक्तिजनित बोध्यत्वा

वच्छिन्न तत्वायर्कक भाव्यम् ॥१०९॥

तद्धितभव कर्म्मण: किं लक्षणम् ?

प्रकृतिजन्य बोध प्रकारो भाव: ॥११०॥

तद्धितत्वंच किम् ?

तत्तस्मै साधनाय हि तत्वं तद्धितत्वम् ॥१११॥

॥ इति ॥

मि. ज्येष्ठ शुक्ला ७ शनिवार सं. १९६२ बि.

मिलने का पता

भजनलाल कुतुबफ़रोश

गली टोकरेयां कटड़ा सफेद

अमृतसर